

# திறவுகோல்

2054

வைகாசி மாத இதழ்

**வெளியீடு:**

**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.**

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# பொருண்மை: உன்னத உழவன் (சிறுகதை)

*"மாப்ள...மாப்ள... கதிரவா, எங்க ரெண்டு நாளா ஆள காணோம்."*

*"தங்கராசு மாமா, நல்லா இருங்கிங்கிளா?"*

*"நல்லாயிருக்கேன் மாப்ள. ஆனால் மனசு தான் சரியில்லை. இந்த முறையும் என்னுடைய நிலத்தில விளைச்சல் இல்லாம போச்சு. எதிர்பார்த்தது ஏமாற்றமாச்சு மாப்ள."*

*"தங்கராசு மாமா, கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க? நீங்க பல வருஷமா விவசாயம் பார்த்துட்டுத் தானே இருக்கீங்க. அப்புறம் எப்படி இந்த நிலைமை மாமா?"*

*"மண்ண நம்பி என் வாழ்க்கை வீணா போச்சே! மாப்பிள்ளை."*

*"மாமா, அப்படியெல்லாம் சொல்லதிங்க! மண்ணை நாமதான் வீணாக்கிறப்போம். மண்ணு நமக்கு நல்லது தான் பண்ணும். நாளைக்கு காலைல 10 மணிக்கு உங்க வீட்டுக்கு நான் வர்றேன்.*

*நீங்க உங்க நிலத்துல ஒரு அடி ஆழத்தில் குழி தோண்டி இரண்டு கைப்பிடி அளவு மண்ணை எடுத்து வையுங்கள்." என்று சொல்லிவிட்டு கதிரவன் அங்கிருந்து கிளம்பி விட்டான்.*

*சொன்னது போலவே தங்கராசு மாமா வீட்டிற்கு மறுநாள் காலையில் வருகை தந்தான் கதிரவன்.*

*"தங்கராசு மாமா, என் வண்டியில உட்காருங்க. உங்க நிலத்துல எடுத்த மண்ண கையில எடுத்துக்கங்க."*

*கதிரவனின் வண்டி மதுரை அரசு வேளாண்மை வளர்ச்சித் துறையில் மண் பரிசோதனை செய்யும் அலுவலகத்திற்கு நேராகச் சென்றது.*

*"ஐயா, வணக்கம். நாங்க கழுகேர்கடை கிராமத்தில இருந்து வர்றோம்.என் பெயர் கதிரவன். இது என் மாமா தான்" என்று தங்களுடைய நிலைமையை விவரமாக அங்கே அமர்ந்திருந்த அலுவலரிடம் கூறினார்.*

அலுவலகத்திற்குள் வந்த உயர் அதிகாரி கதிரவனை பார்த்து"தம்பி கதிரவன் தானே நிங்க! நேற்று எங்கள் துறை உயர் அதிகாரிகள் அனைவரும் உங்களைப் பற்றி தான் பெருமையா பேசிக்கிட்டு இருந்தாங்க! நானே உங்கள வந்து சந்தித்து பேசலாம்னு நெனச்சேன். நீங்களே வந்துட்டீங்க!"

"ஐயா அப்படி எல்லாம் ஒன்றுமில்லை. வேளாண் துறை உடைய அறிவியல் வளர்ச்சியை என்னுடைய இயற்கை விவசாயத்திற்கு நான் பயன்படுத்திக் கொண்டேன். அதனால தான் விளைய வைக்கக்கூடிய பயிர்களின் தன்மையும், தரமும் மற்ற விவசாயிகளை விடவும் பன்மடங்கு உயர்வா இருக்கும் போல!"

"ஆமாம் தம்பி, நீங்க சொல்றது நூற்றுக்கு நூறு உண்மை. நீங்க நிறைய பயிர் வகைகள புதிதாக அறிமுகப்படுத்தி இருக்கீங்க! அதுவும் எந்த ஒரு செயற்கை உரங்களும் இல்லாமலே."

"எல்லாம் உங்கள் துறையின் வழிகாட்டல் மூலமாகத்தான் ஐயா! நாங்க ரெண்டு பேரும் ரெண்டு நாள் கழிச்சு வர்றோம். இந்த மண்ணோட தன்மையை கொஞ்சம் எங்களுக்கு சொல்லுங்கய்யா. உங்களோட வழிகாட்டுதல்தான் எங்களை போன்ற உழவனுக்கும் மண்ணுக்கும் ஆரோக்கியம் தரும் ஐயா." என்ற அவ்விடத்தை விட்டு இருவரும் அனுமதி வாங்கி கிளம்பினார்கள்.

மறுநாள் மாலையில் மண்ணை வாங்கிய அலுவலக அதிகாரியும், அவர்களின் உயர் அதிகாரியும் கதிரவனைத் தேடி வீட்டிற்கே வந்து விட்டனர். கதிரவனுக்கு ஒரே ஆச்சரியம்! "ஐயா பெரிய அதிகாரிகள் என்னைத் தேடி வந்துள்ளீர்களே. ஏதேனும் தகவல் கொடுத்திருந்தால் நானே வந்திருப்பேனே!"

"கதிரவ உண்மையில் நீதான் பெரிய மனிதன் மண்ணையும், மனிதனையும் காப்பாற்றுகின்ற மிகச்சிறந்த உழவன் உன்னை நான் வணங்குகின்றேன்." என்று பெருமைப்படுத்தினார் அந்த உயர் அதிகாரி.

மூவரும் சேர்ந்து தங்கராசு மாமாவையும் அழைத்துக் கொண்டு அவரது நிலத்திற்கு சென்றனர். அங்கே அதிகாரிகள் பார்வையிட்டு ஒரு திடுக்கிடும் தகவலை தங்கராசிற்கு கொடுத்தனர்.

"தங்க ராசா ஐயா, இந்த மண்ணில் அதிகமான செயற்கை உரங்கள பயன்படுத்தப்பட்டதால இந்த மண்ணு மலட்டு தன்மையாகியிருச்சு. இதை அப்படியே பயன்படுத்தினால் எந்த ஒரு விளைச்சலும் வராது. முதல்ல மண்ண சரி செய்து கொள்வோம். அப்புறம் விளைச்சல பார்க்கலாம். நாங்க சொல்றதை விட உங்க

மாப்பிள்ளை கதிரவனுக்கு அதிகமான அனுபவம் இருக்கும். நீங்க அவர் சொல்ற முறைய தொடர்ந்து செய்யுங்க நிச்சயம் பலன் தரும்." என்று கூறி அதற்கான வழிமுறைகளையும் அறிவியல் பூர்வமான உண்மையையும் விளக்கமாக கூறினார்கள்.

கதிரவனின் வழிகாட்டுதலின்படியே தங்க ராசியின் மண்ணும் விளைச்சலும் எதிர்பார்த்ததை விட அமோகமாக மாறியது. ஆறுமாதம் கழித்து அறுவடை காலத்தில் கதிரவன் போலவே தங்கராசு மாமாவிற்கும் விற்பனை அதிகமாகியது. தங்கராசு மாமாவும் அறிவியலின் வளர்ச்சியை கொண்டு தன் வாழ்வை வளமாக்கினார்.

வேளாண் துறையின் பரிந்துரைப்படி வேளாண்மை வளர்ச்சிக்கும் நாட்டு மக்களின் நலன் பாதுகாப்பிற்கும் கதிரவன் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்கியில் அடுத்து வந்த குடியரசு தின விழாவில் நாட்டின் குடியரசு தலைவரின் கையால் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.



—
வாழ்வியல் கவி,
சா. நாகூர் பிச்சை,
திண்டுக்கல்.

---

# மாறிப்போன புத்தன்

நான்
வழக்கமாய் வணங்கி
தொழுது வழிபடும்
புத்தர் சிலையின்
பார்வையில்
அன்பும் அமைதியும்
காணவில்லை.
அவன் முகத்தில்
மிரட்சியும் கோபமுமே
தேவைக்கதிகமாய்
எஞ்சிக் கிடக்கிறது.

அவன் நேசப்புன்னகை
ஓடிஒளிந்திட
துறுத்திக் கொண்டிருக்கிறது
கொடுவா மீசை.
அருளாசிகள் வழங்கும்
அவன் கரத்தில்
வான்முட்டி நிற்கிறது
துருபிடித்த பட்டாக்கத்தி.

நெற்றியில்
விபூதிப் பட்டையும்

குங்குமப் பொட்டுச் சகிதமாய்
வேறொரு சிலையாய்க்
காணக் கிடக்கிறான் புத்தன்.
பிற உயிர்களிடத்தில்
கருணை விதைக்கச்
சொன்னவனின் காலடியில்
ஆட்டையும் கோழியையும்
அறுத்தெரிகிறார்கள்.

ஆசையைத் துறக்கச்
சொன்னவனுக்குச்
பாட்டில் பாட்டிலாய்ச்
சாராயத்தைப்
படையலிடுகிறார்கள்.
அவன் ஞானம் பெற
அமர்ந்த போதிமரம்
அரசமரமாய்
ஆகிக் கிடக்கிறது.

பேரமைதியை விரும்பிய
புத்தன்
பேரிரைச்சலில்
சிக்கித் தவிக்கிறான்.
இராஜபோகத்தை வெறுத்தவனுக்கு
யானைகளும் குதிரைகளும்
அம்பாரிகளாய்.

அவன் ஞானமும்
போதனைகளும்
எரிகின்ற சூடத்தில்
எல்லை தாண்டிப் போக
பதற்றத்துடன்
அவனைத் தியானித்து விட்டுத்
திரும்புகிறேன்.

இப்போது
அவனை எல்லோரும்
அய்யனாரென்று
உரக்கச்
சொல்லியழைக்கிறார்கள்.
/

## கடவுளும் நானும்

கடவுளின் மடியில்
ஒரு குழந்தை.
நிச்சயமாக நானில்லை.
அது கடவுளின்
குழந்தையாகத்தான்
இருக்க வேண்டும்.

கடவுளையும்
குழந்தையையும்
உற்று நோக்குகிறேன்.
கடவுளின் ஜாடை
ஒத்திருக்கிறது குழந்தையிடம்.
எந்தப் பின்னமுமின்றி
மிகவும் அழகாய் இருக்கிறது.

குழந்தையை மார்போடு
நெருக்கமாய்ச்
சேர்த்தணைத்திருக்கிறார்
கடவுள்.
சித்தம் தெளிய உரையாடுகிறது
பசியென்றுரைக்கிறது
வேண்டியதைக் கேட்கிறது.

அதன் சந்தேகங்களை
முன் வைக்கிறது.
சுறுசுறுப்புடன் இயங்குகிறது.

உனக்குத் தெரியாதது
ஒன்றுமில்லை.
என்னை ஏன்...? எதற்கு...?

இப்படிப் படைத்தாய்
என்கிறேன்.
அதற்கு மௌனித்திருக்கிறான்
கடவுள்.

குழந்தையிடம் நீயும் நானும்
இடம் மாறலாமென்று
கோருகிறேன்.
ஒப்ப மறுக்கிறது குழந்தை.

அவனால் ஊனமாய்
வாழமுடியாதென்றே
என்னை ஊனமாய்ப்
படைத்திருக்கிறான் பாவிக்கடவுள்.

அவனைப் போலல்ல
எம்மக்கள் மேன்மக்கள்.
என்னுடம்பில் தானே
ஊனம்.

அவனுக்கு
நான் யாரெனக் காட்டிட...
அவன்
படைப்பை உதாசீனம் செய்து
என் மனதில் ஊனமின்றி
வாழ்க்கை வட்டத்திற்குள்
மகிழ்வாய் நுழைகிறேன்
நான்.

—

கவிதைகள் ஆக்கம்,
பாரியன்பன் நாகராஜன்,
குடியாத்தம் - 632602.
கைப்பேசி: 9443139353



---

# உயிர் எழுத்துக்களில் என் உயிருக்கு உயிரான அம்மாவிற்காக...

அணுவாக இருந்த என்னை கருவில்
சுமந்து

ஆசைக்காக புளிப்பையும்

ஆரோக்கியத்திற்காக கசப்பையும் உண்டு

இன்னல்கள் ஏற்படுத்திய என்னிடம்
இன்சொற்கள் பேசி

ஈசனிடம் ஈகையை  வேண்டி
ஈட்டியவையை எனக்குத்தந்து

உயிருக்கு உயிராய் உள்ளிருக்கும் என்னை
நேசித்து

ஊஞ்சலாடும் மனதின் மகிழ்ச்சியை

என்னுடன் பகிர்ந்து

எழும்பும் துயரிலும் என்னைப் பேணிப் பாதுகாத்து

ஏடுகளில் என்னைக் கண்டு புருநகைப் பெற்று

ஐவிரலைக் கொண்டு அன்றாடமும் என்னை அரவணைத்து

ஒன்பது மாத வாழ்க்கையை எனக்காக வாழ்ந்து

ஓராயிரம் கவிதை நூலைத் தாலாட்டாகப் பாடி

ஔடதத்தைக் கூட அமிர்தமாய் எனக்காக எண்ணினாய்

இஃதுபோல் தன்னலம் இன்றி என்னலம் காத்த என் அன்னையை ஒரு முறையாவது என் கருவில் சுமக்க வேண்டுகிறேன்....
எந்நாளும் இறைவனை !

—

காவியபிரியா ஆறுமுகம்,
3ம் ஆண்டு மாணவி,
மரியா சித்த மருத்துவ கல்லூரி,
கல்லூரி: கன்னியாகுமரி,
வசிக்கும் ஊர்: சேலம்.

# தன்முனைக் கவிதைகள்

இரு வார்த்தைதான்
சின்னத் தீப்பொறி
என்னால் முடியுமெனும்
ஏக மந்திரம்

பெறுவது போலவே
இழப்பதற்கும் தயாராயிருக்கிறேன்
விளைவைப் பொறுத்து
வீழாமல் வாழ்க்கை

தோல்வியை நான்
நிதானமாக சுவைக்கிறேன்
வெற்றிக்கான ஆற்றல்
வெகுவாய் மனதில்

தற் செயல்களின்
கிடுக்குப் பிடிகள்
சிக்கித் தவிக்கிறது
நானெனும் ஈகோ

நான் இதுவரை
தோற்றதே இல்லை
ஏனெனில் ஜெயிக்க
விரும்பியதே இல்லை

—

ராஜூ ஆரோக்கியசாமி,
திருச்சி.

# கண்ணாடி

முகம் காட்டும் கண்ணாடி முன் நின்று
உன் அகத்தை சற்று ஆராய்ந்து பார்.

உற்சாகமற்று ஓய்ந்து போயிருக்கும் உன்
உள்ளத்தைக் கொஞ்சம் உற்றுப்பார்

சலித்துப்போய் பெருத்துப் போன உன்
சரீரத்தை பார்த்து சரமாரியாக கேள்வி
கேள்.

அலங்கார ரூபம் எங்கே..??
அலைமோதும் கூந்தல் எங்கே..???
அளவான உடற்கட்டு எங்கே..??
என்றதோடு ஏதும் தலைபோகிற
காரியமா...??? என்றது கண்ணாடி
இல்லையென்று தலையாட்டினேன் நான்
தலைவாரக்கூட நேரமில்லையா உனக்கு
என்றது உக்கிரமாய்

உடலையே மறந்த உன்னிடம்
உள்ளத்தைக் காட்டி என்ன பயன்
என்று எடுத்தெறிந்தது.

உன் உருவத்தைத் தான் நான்
பிரதிபலிக்கத்தான் முடியும்...
உன் உள்ளத்தை உயிர்ப்பித்து
உன்னைப் புதுபிக்க உன்னால்
மட்டுமே முடியுமென்ற உண்மையைச்
உரக்கச் சொன்னது.

இதுவா...??? நீ விரும்பிய பிம்பம்
இதிலே உனக்கென்ன இன்பம் என்றதும்
உடனே
இரண்டையும் உடைத்துவிடத்
தோன்றியது, ஆனால் முடியாதே

கண்ணாடியில் எது விழுந்தாலும்
சேதம் அதற்குத்தானாம்.
பார்க்காத,பயனற்ற கண்ணாடி
இருந்தால் என்ன..??
உடைந்தால் என்ன..?

காலக்கண்ணாடி மாறிவரும் வேளையில்
இந்த மாயக்கண்ணாடிகள்
உடைக்கப்படவேண்டும்.

சிறியதை எல்லாம் பெரிதாய் காட்டும்
அறியாமை என்னும் பூதக்கண்ணாடிகள்
கிழட்டப்படாத வரை முழுநறை எய்தி
கிழப்பருவம் அடையும் முன்னே உனக்கு
மூக்குக்கண்ணாடி மாட்டி முற்றுப்புள்ளி
வைக்கப்படும்.

பெண்ணே....!!!!!
கண்ணிருந்தும் குருடாய் இருந்தால் நீ
கல்லெறிந்த கண்ணாடி தான்.
உன்னை கவனமாக கையாளவைப்பதும்
கடினமாக கையாண்டால்
கையைக்கிழிக்கும் கண்ணாடியாக
இருப்பதும் உன் கையிலேயே தான்
இருக்கிறது.

—

G. சூர்யகலா சரவணன், B.E,
கண்டிதம்பேட்டை, மன்னார்குடி.



# வெற்றி என்பது தொடர் முயற்சியே!

ஒரு மனிதனின் வெற்றி அவன் நிர்ணயித்த இலக்கை அடைவதில் இருக்கிறது என்பது பொது கருத்து, ஒருவகையில் அது சரி என்றாலும், ஒரு இலக்கை அடைந்து விட்ட பிறகு, வெற்றி அடைந்து விட்டோம் என்று தூங்க ஆரம்பித்தால் பெற்ற வெற்றியும் பறிபோகும். எனவே தொடர் முயற்சியும் அடுத்த இலக்கை அடைவதில் செயலுமே வெற்றியை தக்க வைத்துக் கொள்ளும்.

மேலும் உங்கள் முயற்சி சரியான முறையில் இருக்கும் பட்சத்தில் இடையில் தோல்விகள் ஒரு பொருட்டல்ல, ஏனெனில் வெற்றி என்பது தொடர் முயற்சியே, அது வென்றாலும் தோற்றாலும். நான் ஒருபோதும் தோற்கவில்லை ஏனெனில் நான் வெற்றியாளன் என்ற மனோபாவம் இருந்துவிட்டால் இழந்ததை மீண்டும் பெற முடியும்.

பல நாடுகளையும் வென்ற அலெக்சாண்டர் போரஸ் மன்னனை எதிர்கொண்டு அவனையும் தோற்கடித்து சிறையில் அடைத்தான்.

அடுத்த நாள் விலங்கிடப்பட்டு போரஸ் மன்னன், அலெக்சாண்டர் முன் நிறுத்தப்பட்டான். "நீ எப்படி நடத்தப்பட வேண்டும் என்று நினைக்கிறாய்"? அலெக்சாண்டர் போரஸ் மன்னனை பார்த்து கேட்டான். அதற்கு போரஸ் நெஞ்சை நிமிர்த்தி " ஒரு நாட்டின் அரசனைப் போல் என்னை நடத்த வேண்டும்" என்று கம்பீரமாக கூறினான்.

"நீ தோற்ற போதும், ஒரு நாட்டின் அரசன் என்கிற மனோபாவம் உன்னை விட்டு அகலவில்லை, அதனை பெற்றுவிட முடியும் என நம்பிக்கையோடு தொடர்ந்து முயற்சி செய்கிறாய் அதனால் உன் நாட்டை நீயே வைத்துக்கொள்" என்று நாட்டை போரஸ் மன்னனிடம் திருப்பி கொடுத்தான் அலெக்சாண்டர்.

தொடர் முயற்சிகள் தோல்வியை வெற்றியாக்கும், வெற்றியை தக்க வைக்கும்.



—
முனைவர். சா.சம்பத்,
தேசிய பயிற்சியாளர்
மற்றும் உளவியல் ஆலோசகர்.
மன்னார்குடி.

# காணொலி அழைப்பில் ஒரு விரிசல்...

வெளிநாட்டில் வேலை செய்யும்
தன் தந்தையிடம்
தினமும் காணொலி அழைப்பில்
பேசுவதை வழக்கமாக
கொண்டிருந்தாள்
மூன்றாம் வகுப்பில்
படிக்கும் சிறுமி
மகிழினி.

வழக்கம்போல் இன்றும்
பேசிவிட்டு மிகுந்த
சந்தோஷத்துடன்
ஓடி வந்தாள் தன்
அம்மாவிடம் சொல்ல.
ஆனால் அவளின் அம்மாவோ
கையில் கைப்பேசியுடன்
சமையலில் ஈடுபட்டிருந்ததைப்
பார்த்து வெறுமையுடன்
திரும்பி வந்து
தன் தாத்தாவிடம்
சொல்லபோன போது
அவரும் கையில்
செய்தித்தாளுடன்
அமர்ந்திருப்பது கண்டு
ஒரு நிமிடம் நிதானித்து
பின் மீண்டும்
மெல்ல மெல்ல
பக்கத்துவீட்டில்
குடியிருக்கும்
தன் வகுப்பு தோழி
இளமதி வீட்டிற்கு சென்று
இளமதி " நான் இவ்வளவு
நேரம் எங்கப்பாகிட்டே
காணொலி அழைப்பில்
பேசினேன். எனக்கு
நிறைய சாக்லெட்
பொம்மை எல்லாம்
வாங்கி அனுப்பியிருக்கார்.
உனக்கும் கொண்டு
வந்திருக்கேன்"
என்று கூறிவிட்டு
"உன் அப்பா எங்கே,
உன் அப்பா காணொலி
அழைப்பில் எல்லாம் பேச
மாட்டாரா? எனக்
கேட்டதும்,
பட்டென கூறினாள்
இளமதி " உன் அப்பா
காணொலி அழைப்பில் தான்
பேசுவார். ஆனால்
என் அப்பா வீட்டில்
என் அருகிலிருந்தே
பேசுவார்" என்று.

இதைக் கேட்டவுடன்
மனமுடைந்து மீண்டும்
வீடு திரும்பினாள்
மகிழினி.

—

மு. ஜெரோஷா,
எழுத்தாளர்,
திருப்பூர்.

# தொழிலாளர்களைப் போற்றுவோம்!!!

உழைப்பாளர் நெஞ்சத்தை மகிழ்விக்கும் நன்னாள்
உழைப்பினைப் பறைசாற்றும் உற்சாகப் பொன்னாள்
தொழிலாளர் மனதை நிறைக்கும் திருநாள்
அழகான சித்திரையில் பிறந்திடும் பெருநாள்!

தொழிலாளர் தினத்தன்று புதுப்பாட்டுப் பாடு
உழைப்புக்கு உயிரூட்டும் அவர்கள்பின் ஓடு
பாட்டாளி படுகின்ற துயரத்தைக் கேட்டு
பண்புடனே அன்புக்கரம் அவர்களுக்கு நீட்டு!

மண்ணுக்குப் பாடுபடும் தொழிலாளர் வலிமையை
விண்ணிலே ஏற்றி வியன்புகழ் பெறுவோம்
மே! மாதம் உழைப்பாளர் மாதமெனப் பாடுவோம்
மேன்மையாய் தொழிலாளர் கவலைகளைப் போக்குவோம்!

உழைப்பாளர் தோளோடு தோள்சேர்ந்து செல்வோம்
உழைப்பாளர் கொடுமைகளைத் தீயிலிட்டுக் கொல்வோம்
தொழிலாளர் தினத்தன்று தோள்தட்டி ஆடு
அழியாத அவர்பணிக்கு பொன்னாடை சூட்டு

காடுகளை கழனியாக மாற்றி வைத்து
கற்பகத் தருவாக நெல்லைத் தூவி
மேடுகளைச் சமமாக்கி வெய்யில் பாரா
மேன்மையாளர் சிந்தனைக்கு உரமாய் நிற்கும்..

உழைப்பாளர் உள்ளமதை மகிழச் செய்வோம்
உழைப்பாளர் உழைப்புக்கு மதிப்பளிப்போம்
உலகத்தின் உயிர்நாடி தொழிலாளி தான்
கலக்கமில்லா உளங்கொண்ட நல்மனிதனாம்!.......

அட்டைப்பட உதவி:
**திரு. விக்னேசு, சிங்கப்பூர்.**

—

செல்வன் ச.வாசுதேவன் (நடுநாட்டுத்தமிழன்)
முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு, இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் - 613010 | அலைபேசி : 7094762430

# அம்மா - அவளன்றி உன்னில் ஓர் அணுவுமில்லை

ஆயிரம் கவிகள் கவிதைகளைத்
தொடுத்தாலும்
வார்த்தைகளில் உன்னன்பை அளக்க
இயலாதம்மா!

அன்பினுக்கோர் இலக்கணம்  வகுத்தால்
உன்னடிசேர்ந்திடுமம்மா!

பூமியிலே நான் பிறக்க மறுபிறவிநீ
எடுத்தாயம்மா!
உனக்கென இருந்தயாவினையும்
எமக்கெனமாற்றினாய் அம்மா!
ஈன்றெடுத்த  நாள்முதல்
என்னையுன்லோகமாய்
எண்ணினாயம்மா!

யாதிலும் யாவையிலும் என்னை
முதலாய் பார்த்தாயே
அதற்கென்ன நானென்ன செய்தேனோ
இனியென்னசெய்குவேனோ  அம்மா!

சின்ன நிலவினை நான் வரைந்தாலும்
சந்திரனில்நானோ கால் பதித்ததற்போல
பெருமைமிகுமம்மா!

என் ஒவ்வொரு அசைவினையும் நீர்
ரசித்துசிரித்து மகிழ்ந்தென்னை
வளர்த்தாயே என்தாயே!

என்றும் சிறுப்பிள்ளையாய் உன்
அன்பினை பெருவேனம்மா!

மனிதவேடம்பூண்ட
தாய்மார்களைத்தவிக்க விடும்
வளர்ந்தவர்களே
வாழ்க்கையை திரும்பிப் பாருங்கள்
உண்மையை உணருங்கள்
அவளன்றி உன்னில் ஓர்
அணுவுமில்லை!!!

—

இரா.ரம்யபாரதி,
புதுச்சேரி.



மா. நிரல்யா,
சிங்கப்பூர்.

# மரையில் மால்மருகன்...!

(கூவிளம் புளிமா புளிமா கூவிளம் )

அல்வினைக் குருதி அசுரன் மெய்யினுள்
வல்லையின் சுனையாய் வருநாள் கூடவே
நல்வினை துளிர்க்க நளின மாறினில்
செல்வவேல் குழவி சிவனில் பூத்தார்!

அல்வினை - தீவினை ;
வல்லை - கானகம்;
நளினம் - தாமரை;

# கிராமியக் கீதம்

தலைப்பு:
அவகுத்தவச்ச நாள்முதலா
நான்சுத்திவந்தேன் ராப்பகலா

பப்பாளி நெறத்தழகி பள்ளிக்கொடம்
வரலயே!

கப்பக்கொழங்க காணாம
கொறஉசுருநா கெறங்குரேனே!

அப்பத்தா, அருக்காயி
சமஞ்சுடானு அம்மாகிட்ட

குப்பக்கீர கடஞ்சுக்கிட்டே
மொணங்கயில முழுஉசுருவருதே!

உப்புமூல அருவாவ
உருவிக்கிட்டு தங்கத்துக்கு

சப்பாணித் தோப்புல தென்னயோல
வெட்டிப்போறேன்

சுப்பையன் காட்டுல
பனயோல கொண்டுப்போறன்

பாப்பத்திக்குப் பாத்துபாத்து
குச்சுகட்டி குத்தவைக்கப்போறேன்

மஞ்சணத்திய பாக்காம மன்மதனுக்கு
தூக்கவராதே!
கொஞ்சிப் பேசாம முப்பதுநாளும்
கொல்லுமே!
கஞ்சத்தனம் பண்ணாம கடுதாசியில
முத்ததாபுள்ளே!
எஞ்சாமிய பாக்காம ஏஉசுரு
உறங்குமாயா?

பஞ்சா பறந்துவாயா தாவணிகட்டி
தவமிருக்கேன்!
இஞ்சி இடுப்பக்காட்டி கன்னிமூலயில
குடியிருக்கேன்!

—

ஸ்ரீவி. முத்துவேல்,
சென்னை.



# அடுப்பங்கரைப் பல்லிகள்

சந்தத்தோடு கவலைகளை இரையும்
சலனப்பல்லிகள்
சந்தத்தை உற்றுக்கேட்டால் சகலதும்
புரியும்.
நான்கு சுவர்களுக்குள் நாளைய
விடியலுக்காய்
நீந்திஅகொண்டிருக்கும்
உதவாக்கரை என்று பெயர்சூட்டப்பட்ட
வயோதிபக் கிழவி

அடுப்பங்கரையே உலகமாக
அம்மியுடன் கொடுக்கல் வாங்கல்
புரியும்
அவளிற்கு வயது
எழுபதிருக்கும்.

புதுவருடத்திற்கு புத்தாடை கிடைக்கும்
என எண்ணியே பல
வருடங்களாயிருக்கும்.
எது கிடைத்தாலும்
"மகனுக்கு" என
சேலையில் முடிந்துக் கொள்ளும்
அவளுக்குள்ளும்
அன்பிருக்கும்.
உறவென்று சொல்லிக் கொள்வதற்கு
அடுப்பங்கரை பல்லிகள் தவிர
உறவில்லை
உணவும் உறவும் ஊட்டி வளர்க்கும்
பல்லிகளே உறவாகையில்

மொழியிலக்கணம் பயின்ற அவள்
வீட்டுப்பல்லிகள் முதுமானிகள்
விழிநீரைக் கொண்டே இவள்
பெருமைப்பாடும்.
விருந்தினராய் வந்து போ என
பல்லிகள் சொல்லிக்கொண்டிருக்கும்.

தாய் முகவரி தொலைத்த உனக்கு
சந்தத்தால் சமிக்ஞை காட்டுகின்றேன்
"வந்து போ" என பயணமாகின்றன
அடுப்பங்கரை பல்லிகள்....

—

மதீரா,
அறிவிப்பாளினி,
இலங்கை.

---

# குறுங்கவிதை

கிழிந்த நிலையில் புத்தகம்
திறந்து பார்க்கிறேன்
உள்ளே உயிரெழுத்துக்கள்.

—

ஆனந்தன்,
திருப்பூர்.



# துளிப்பாக்கள்

யாருக்காக காத்திருப்பு
ஆளற்ற தொடரி நிலையத்தில்
தனிமையில் பறவைகள்

பச்சைக்கொடி காட்டியதும்
ஆனந்தமாய் பயணிக்கும் தாய்
கையசைக்கும் மழலை

விண்ணைத்தொட்டவானூர்தி
அங்கங்கே மேகக்கூட்டங்கள்
சிறுமி வரைந்த ஓவியத்தில்...

சாய்ந்த மரக்கிளைகள்
எரிய காத்திருக்கின்றன
ஏழைக்குடிசைக்குள்....

ஓய்வு எடுக்கின்றன
பள்ளிப் பேருந்துகள்
கோடை விடுமுறை

கவிழ்ந்து கிடக்கும் வானத்தில்
வியர்த்து கொட்டுகிறது
மழைத்துளிகள்

பெருக்கெடுக்கும் ஆற்றை
சபிக்கும் சிறுவர்கள்
உடைந்த பாலம்

தாலாட்டு பாடல்
அயர்ந்து உறங்கும் மழலை
பேச்சிழந்த தாய்

வாடிய முகம் சுமக்கிறது
வாடாத மலரை
பூ விற்கும் சிறுவன்

வெண்மேகத்தில்
கருப்பர்களின் ஆதிக்கம்
மழை மேகம்

ஆளற்ற அரங்கத்தில்
அரங்கேறிய நர்த்தனம்
ஓ! காற்றிலாடும் மரங்களோ?

## மேதினம்

சுமையெனும் படிப்பை
நீ கற்கும்போதெல்லாம் உன்
இமைகள் வாசிக்கும்
வாழ்க்கை பாடங்களை...!

மேகங்கள் சுரக்கும் நீரைவிட
விழிகள் சுரக்கும் நீர்
வலிமையானது தேக்கிவைத்து
சுமக்கிறாய் யாருக்காக....!

கொடுமை காணாத உனக்கு
கொடுமை மட்டுமே கூலியாய்
பரிசளிக்கப்படுகிறது...!
வறுமையிலும் சிரிக்கிறாய்
உறங்கும் விழிகளில்
உறங்குகின்றனஉண்மைகள் ..!

வேதம் கற்பவரின் முன் உன்
பாதங்கள் நடை பயில்கின்றன
மேடு பள்ளங்களில் உன்னை
சுமந்து செல்வதற்கு...!

உனக்கில்லை செருக்கு
உழைப்பே செல்வப் பெருக்கு

மேனியெங்கும் அழுக்கு
உயர்த்தி வாழ்வதேஉன் இலக்கு

சொல்லைஎழுதாத கரங்கள்
கல்லை சுமக்கின்றன...!
வியர்வைத்துளிகள்
வெடித்து சிதற மேனியெங்கும்
எழுதுகின்றாய் பசிப்பிணியை

தலைகணங்கள் அறியா
தலைகள் மட்டுமே
சூடிக்கொள்கின்றன
கணங்களின் சுமையை
கணங்கள் குறைந்ததா?..

கலங்கும்விழிகளில் ஒளிர்கிறது
இன்னொரு கலங்கரை...!
வீரத்தமிழச்சி நீ
போர்வாள் ஏந்தாத
போராட்டங்களை ஏந்திய
படைத்தளபதி...!
வரலாறு படிக்காமல்
வரலாற்றில் வாழ்கிறாய்
வாழ்நாளெல்லாம்...!

உன்னை வருத்தி
உயர்கிறான் முதலாளி
கோடுகளை வரையாதகரங்கள்
கோடிடுகிறது பாதங்களால்
வலிப்பயணங்களை....!

மூச்சுக்காற்றில்
அனல்பறக்க
அடிவயிற்றை நிரப்புகிறாய்
அடிமேல் அடிவைத்து...!

—

ஞா. முனிராஜ்,
அருப்புக்கோட்டை.

---

# துளிப்பாக்கள்

ஒற்றை இறகு
புரட்சி செய்கிறது
கூண்டுக்குள் பறவைகள்

இரவுக்குடையில்
ஏகப்பட்ட பொத்தல்கள்
விண்மீன்கள்

ஒற்றுமையுடன் பறந்தன
அரசியல்வாதிகளின் கொடிகள்
தலைவர் சிலையருகே அணிவகுப்பு

எந்த இடமும்
விளையாட ஏற்றதாகின்றன
குழந்தைகளுக்கு

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம் | 6380704001



# எங்கே போனாய்?

முன்னர்
பதற்ற பொழுதுகளில்
காட்டிய நிதானம்

தொடர் தோல்வியிலும்
முடியும் என கொடுத்த
நம்பிக்கை

எதிர்பாராதவை
வந்த போது விழித்துக்கொண்டு
எடுத்த சரியான முடிவு

செயலுக்கு போதாது
என்று தெரிந்த பின்
சேர்த்துக்கொண்ட அறிவு

விமர்சனங்களும்
கேலியும்
பரிசான போது
புறந்தள்ளி
காரியத்தை நோக்கிய
கவனக்குவிப்பு

என பெரும் துணையாய்
இருந்த
புத்தியே

இக்கணத்தில் உள்ள
நிறைய கஷ்டங்கள் உள்ள
பொழுதினில்
உதவாமால்
எங்கே போனாய்?

கடும் கோபத்தில்
மனதின் கேள்வி

## ஆரம்பிச்சான்டையா..

பெரிய பணியை
நேரம் பார்க்காமால்
முடிக்க வேண்டிய
அவசர அவசியம் உணர்ந்து
அதனுடையே
பயணித்து
உறக்க இரவுகளை
தொலைத்து
கடின உழைப்பு
கொடுத்து
முடித்த நாளில்

ஓய்வு முழுமையாய்
எடுக்க முடியாவிட்டாலும்
இனி பிற பணிகளை
நிதாமானமாய்
செய்யலாம்
என புத்தி மகிழ்வுறுகையில்

சரி சரி
இதை காரணமாய்
கொண்டு

எப்பொழுதும் செய்யும்
தினசரி வேலைகளை
நிலுவை வைத்துள்ளாய்

நீண்ட காலமாய்
தொடங்க வேண்டிய
பணியை ஆரம்பிக்கவில்லை

இதெல்லாம் உடனடியாய்
ஆரம்பி

ஆணை மனதிடம்

எதிர்வினையாய்
ஆரம்பிச்சான்டையா
புலம்பல் புத்தியிடமிருந்து

## வேண்டாம்

சம்பாத்தியம்
உழைப்பு இல்லாமால்

ஆலோசனை
விஷயம் தெரியாமால்

செயல்பாடு
திட்டம் இல்லாமால்

வாக்குறுதி
தன் நிலை அறியாமால்...

## சொல்பவர்கள் எல்லாம்

உன்
இலக்கு
திட்டமிடல்
செயல் பயணம்
பயணத்தில்
வந்த எதிர்பாராதவைக்கு
கொடுத்த எதிர்வினை
எதுவுமே
சரியில்லை
விளைவாய்
முடிவும் சரியான படி
அமையவில்லை
என விமர்சனைகளை
சொல்வர்களை
நோக்கி

நீங்கள்
பிறர் சொல்வதை
மனப்பாட பகுதியாய்
சொல்பவரா

வேடிக்கைப்பார்ப்பவரா
களம் கண்டவரா
கண்டாலும்
நான் பயணித்த
அதை பாதையில்
பயணிப்பவரா

என் நிலைமை
சூழ்நிலைமை
அறிந்து தான்
விமர்சனமா

என எதிர்கேள்வி
என்னிடமிருந்து

பின்னோக்கிய

செய் தொழிலுக்காய்
பல மைல் தூரம்
சொந்த மண்ணை விட்டு...

ஊரில் நடக்கும்
திருவிழாக்கள்
பொது நிகழ்வுகள்
இணைய உதவியால்
காண நேருகையில்

இது எந்த இடம்
இங்கு சென்றிருக்கோமா
ஆம் எனில்

இங்கு தானே
நண்பர் கூட்டத்தோடு
கல்லூரி காலங்களில்
திரைப்படம்
அரசியல்
கிரிக்கெட்
சமூகம்
என அனைத்தும்
அறிந்ததாய்
விமர்சன நோக்கோடு
அளாவளாவினோம்

அன்றைய
நிகழ்வுகள் பேசி
களித்தோம்

குழுப்படிப்பு
என்ற பெயரில்
கொஞ்சம் படிப்பும்
நிறைய அரட்டையுமாய்
பொழுது போக்கினோம்

கோயில் காண்கையில்
கஷ்ட சிக்கல்
நேரத்தில்
இறைவா
இதிலிருந்து
என்னை காப்பாற்று
என மனமுருகினோம்

வாழ்கின்ற
வீடு இருக்கும்
வீதி காண்கையில்
குறுகிய இடத்தில்
விளையாடி சந்தோஷித்தோம்

## படித்த பள்ளி

காண்கையில்
மனம் முழுவதும்
பயமற்று
உற்சாகமாய்
இருந்தோம்

திரையரங்கு
காண்கையில்
படம் பார்த்துக்கொண்டிருக்கும்
போதே
இது தான் கதை
அடுத்தது
இது தான் காட்சி
இது தான் வசனம்
என சொல்லி
சரியாய் இருந்தால்
சந்தோஷப்பட்டு
இல்லை எனில்
வருத்தப்பட்டோம்

என
நினைவுகள்

## அதனாலேயே...

இன்றைக்கு
என்ன செய்ய வேண்டும்

எந்த வரிசையில்
பணி முடிக்க வேண்டும்

ஒவ்வொன்றுக்கும்
எந்த முக்கியத்துவம்
கொடுக்க வேண்டும்

என்று திட்டமிடலில்

தொடங்கி

செயல் பயணம்
அப்படியே
அமைய

நம்பிக்கையும்
உற்சாகமும்
சந்தோசமும்
கொடுக்க

அது
மீண்டும்
மீண்டும்
தொடர்வதாலேயே

நிகழும் கணங்களில்
உணர்வுகளின்
அளவீடுகள்
குறைவது இல்லை

A.S. சுந்தரராஜன்,
மானாமதுரை.
தொடர்பு இலக்கம்: 9994920236

---

# பேரபேதம்

ஒரு முழம் மல்லி இருபது ரூபாயென
சொன்ன முனியம்மாவிடம்
ஒரு முழம் மல்லியும்
கொசுறாக இரண்டு ரோஜாக்களும்
வாங்கியதில்
பூத்துக் குலுங்கியது மனம்
தள்ளுவண்டியில்
காய்கறி விற்கும் பொன்னம்மாவிடம்
எடைக்கு கூடுதலாகவே
காய்கறி எடுத்துப் போட்டு
கறிவேப்பிலை, கொத்தமல்லியை
காசின்றி ஏராளமாக
எடுத்துக் கொண்டதில் ஏக மகிழ்ச்சி

தயிர் விற்கும்
தாச்சியம்மாவிடம்
கூடுதலாக இரண்டு கரண்டி தயிரைக்
கேட்டு வாங்காவிட்டால்
தயிரை போல
இறுக்கமாகும் மனசு

பல்பொருள் அங்காடியில்
ஒரு கோப்பைத் தயிரை
எழுபது ரூபாய்க்கும்
பழம் காய்கறிகளுக்கு
எடைக்கு கூடுதலாக இருக்கும்
ஒவ்வொரு கிராமுக்கும்
விலையிடும்போதும்
கைப்பையை கட்டணம்
செலுத்தி வாங்கும் போதும்
வங்கியட்டையை
தேய்த்துவிட்டு
வாய்மூடி வருகிறது
எளியவர்களிடம்
வாயாடிய வாய்

—

பா. சிவகுமார்.

# மாணவன் ச.வாசுதேவனின் மரபுவெளி நூல் வெளியீட்டு விழா




*12.04.2023 அன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் மாணவன் ச.வாசுதேவன் எழுதிய மரபுவெளி (தமிழ்க் கவிதை மரபின் தொடர்ச்சி) நூல் வெளியீட்டு விழா சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது. இவ்விழாவில் தலைமையேற்று, நூலை வெளியிட்டு பன்னெடுங்கால கவிதை மரபு குறித்து, தமிழ்ப்பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் வி.திருவள்ளுவர் அவர்கள் சீரிய நடையில் உரையாற்றினார்.*

*பல்கலைக்கழகப் பதிவாளர் பேராசிரியர் சி.தியாகராஜன் மாணவர்களின் படைப்பாற்றலை ஊக்குவிக்கும் வகையில் முன்னிலை உரை வழங்கினார். இந்த விழாவில் நடுநாட்டு இலக்கியங்களின் முன்னோடி எழுத்தாளர் கண்மணி குணசேகரன் நூல் வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றினார், முன்னாள் மாவட்ட அரிமா சங்க ஆளுநர் திரு.சௌமா இராஜரத்தினம் முதல் பிரதி பெற்று வாழ்த்துரை வழங்கினார்.*



*தொடர்ந்து கலைப்புல முதன்மையர் பேராசிரியர் பெ.இளையாப்பிள்ளை, கல்வி நிலை ஆய்வு இயக்கக இயக்குநர் பேராசிரியர் ஜெ.தேவி, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற தஞ்சாவூர் கிளையின் மாநகரத்தலைவர் முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். நூலாசிரியர் செல்வன் ச.வாசுதேவன் ஏற்புரை வழங்கினார்.*

*நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரையும் தனித்திறன் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் முனைவர் பெருமாள் கிட்டுசாமி வரவேற்றார். இலக்கியத்துறை மாணவி ம.மஞ்சு நன்றி கூறினார். நிகழ்வை சீராக தொகுத்து வழங்கினர் இலக்கியத்துறையின் முதுகலை மாணவர்களான வே.கஜேந்திரன், வெ.கௌசல்யா. பல்கலைக்கழக பேராசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.*

# தேடலின் தேவை

வயிற்றுப் பசியின்
வாட்டம் போக்க
முயன்று புரிந்த
முதல் தொழில்
உழைப்பு

தாகத்திற்காய் தண்ணீர்
மோகத்திற்காய் துணை
மானத்திற்காய் ஆடை
ஞானத்திற்காய் தவம்
தேடலின் தேவையில்
நாகரிகம் வளர்த்த
நாயகன் உழைப்பு

பச்சை மாமிசம்
சுட்டுத்தின்று
பாதுகாப்பிற்கு
உறைவிடம் நிறுவி
கற்கள் உடைத்துக்
கருவிகள் செய்து
காதல் வீரம் காத்திட
கடும்போர் ஆற்றி
காடழித்து நாடாக்கி
கல்விக் கண்திறந்து
ஞாலம் வளர
நடத்திய கடமைகள்
கடின உழைப்பின்
சரித்திர சாதனை

காலம் சொல்லும்
கதைகளில் எல்லாம்
அரசன் உழைப்பு
அரியணையில்
குடிகளின் உழைப்பு
நடுத்தெருவில்

உணவை விளைப்பவன்
உறக்கம் பசியுடன்
மாளிகை கட்டுபவனுக்கு
மரநிழல் வசிப்பிடம்
ஆணும் பெண்ணும்
பணிக்குச் சென்றும்
அகப்படவில்லை
குபேரன் கடைக்கண்
மாதக்கடைசி மல்யுத்தம் நடத்த
தவணை வாழ்வில்
தள்ளாடும் குடிகள்

முதலீடு செய்தவன்
முன்னேறி வாழ்வதும்
வலியுடன் உழைப்பவன்
வறுமையில் வீழ்வதும்
வல்லரசு நாட்டிலும்
வளர்ந்திடும் நீதி

காப்புக்காய்த்த கைகளில்
கண்ணீர்த்துளிகளே மிச்சம்
கண்காணி பைகளில்
செல்வச் செழிப்பின் உச்சம்

உலகம் இயங்க
உழைக்கும் தோள்கள்
உதிக்கும் கதிராய்
சிவந்துநோகும்
குளிரும் அறையில்
உறையும் முதலை
குருதி சுவைக்க
குழைக்கும் நாக்கை

உழைப்பை விரும்பும்
எஜமான எமன்கள்
உழைக்கும் இதயங்களை
உருக்குலைத்துக் கொல்லுதல்
தொடர்ந்து நிகழும்
தொழிற்சாலை சாபம்

குருதியை வியர்வையாக்கி
உறுதியை உழைப்பாய் மாற்றி
இறுதி மூச்சுவரை
இடையராது உழைத்தும்
அதிகார வஞ்சனையில்
அழிந்தொழியும் பாட்டாளி
இன்புற்று வாழ
ஏற்ற வழிவேண்டும்

## சேருமிடம் நரகம்

தலைகள் கொய்து
கிளைகள் முறித்து
வேர்கள் அறுத்து
உயிரற்று வீழும்
ஒவ்வொரு மரத்திற்கும்
யாரேனும்
என்றேனும்
நேசித்துச் சூட்டிய
செல்ல பெயரிருக்கும்
நிச்சயம்

கொளுத்தும் கோடை
கொழிக்கும் அடைமழை
குளிர்த்தும் மூடுபனி
எல்லாக் காலத்தின்
இளம்பருவ நாட்களை
வீடுகள் தொலைத்துக்
கபடி

கண்ணாமூச்சி
பம்பரம்
கோலி
ஆபியம்
கோட்டிப்புல்
சோடிப்புறா
கல்லா மண்ணா
ஆடித்திரியும் விழாக்களம்
வீதியோர நிழல்மரம்

பள்ளி நாட்களில்
பிற்பகல் தேர்வுக்கு
முற்பகல் பயிற்சியும்
முற்பகல் தேர்வுமுடிவில்
சோட்டுப்பிள்ளைகளோடு
பரிட்சை விவாதம்
பங்கீட்டுத் திண்பண்டம்
வெட்டிநியாயம்
வெயில்தாழக் காத்திருப்பு
விறகு சேகரிப்பு
வெளியுலக வகுப்பறை
ஆசிரியர்களுக்கு அடுத்தபடி
புங்கைமரம் தோழி
புளியமரம் போதி
வேப்பமரம் ஞானி

விடலைக் குறும்புடன்
வீசும் கற்களால்
விழும் புளியம்பழங்கள்
அரைமணி நேரத்தில்
மிதிவண்டி வியாபாரியின்
சேமியா ஐஸ்ஸாகவும்
முந்திரிப் பழமாகவும்
சோன் பப்டியாகவும்
சவ்வு மிட்டாயாகவும்
பண்ட மாற்றாகிப்

பசித்தீர்க்கும்
வறுமை வயிற்றை

பறவைகள்
அணில்கள்
பல்லிகள்
பாம்புகள்
உடும்புகள்
ஓணாண்களின்
வீடுகள் அழிந்து
கூடுகள் குலைந்து
திசைக்கொன்றாய்
திரும்ப வழியின்றிப்
அனாதைகளாய் புலம்பெயர
இராட்சத இயந்திரத்தால்
இரக்கமின்றிக் கூறுபோட்டுச்
சரக்குந்துப் பாடையில்
மரப்பிணங்களை ஏற்றி
கோடிப்பணம் சம்பாதித்து
கோட்டையில் வாழ்வது
வாயற்ற உயிர்களின்
வானளவுச் சாபங்கள்

தலைமுறைகள் கடந்து
தழைத்திருந்த மரங்கள்
சாலை விரிவாக்கத்தில்
சமாதியாதல் கண்டும்
நாகரீக வளர்ச்சியின்
நன்மைக்கென்று கடத்தல்
அனைவரும் அறிந்த
ஆகச்சிறந்த தப்பித்தல்

மனிதரைக் கொன்றாலும்
மன்னிக்கின்ற தேசத்தில்
மரங்களை வெட்டினால்
மரண தண்டனைக்கு வாய்ப்பில்லை
சுயநலத்தின் போதையில்
இயற்கையின் நிழற்குடைக்கு
இறுதி ஊர்வலம் செய்து
செயற்கையின் சொகுசுந்தில்
செய்யும் விரைவுப் பயணங்கள்
சேருமிடம் நரகம் .

## அழகிய விபத்து.

நட்சத்திர மூக்குத்தி
நதியான கோணல்வாக்கு
பின்னாத நதிக்கூந்தல்
பிறைநிலா முன்நெற்றி
குறிவைக்கும் புருவங்கள்
கொழுகொழுத்த கன்னங்கள்
மாலைக் கதிரவனாய்
மதிமயக்கும் செந்தூரம்
மையிட்ட விழிகளின்மேல்
மயில்தோகை சாமரங்கள்
தந்தக் கழுத்துக்குத்
தங்கத்தால் பொன்னாரம்
செதுக்கிய உதடுகளில்
செந்தேனாய் முறுவல்கள்
பருத்திநூல் புடவைக்குள்
பதுங்கிடும்  பருவங்கள்
புதுக்கிய வெட்கமெல்லாம்
புலரும் வைகறை புஷ்பங்கள்
சோழன் சிலையெல்லாம்
சொக்கிவிழும் பேரெழிலில்
சாலையில் நடக்கையிலே
சத்தியமாய் விபத்துகள்
மூளையைக் கலங்கவைத்து
முதுகுத்தண்டில் வெடிகள்வைத்து
நாடி நரம்புகளில்
நாகப்பாம்பு சீறவைத்து
ஓடி ஒளிவதெங்கே
ஓவியமாய் குழைவதெங்கே
பேசும் செந்தமிழும்

பேதைமை குறும்புகளும்
ஆளை சாய்க்குதடி
ஆவியை மேய்க்குதடி
வாழும் காலத்தில்
வாழ்கின்ற தேவதையே
வாழ்வின் பொழுதனைத்தும்
வாய்த்திடுமா வாய்முத்தம்.

## தேவதையின் அம்சமில்லை

சிற்பமாய்   உருவமில்லை
சித்திரமாய் ஜாடையில்லை
அலங்கரித்த கூந்தலில்லை
ஆரவாரப் பேரழகுமில்லை
ஒட்டும் திலகமில்லை
உதட்டுச் சாயமில்லை
துருவங்கள் குறிவைக்கும்
தூண்டில்வளைவு புருவமில்லை

மத்தப்பாய் சிரிப்புமில்லை
மாங்கொத்தாய் நாணமில்லை
தேனீக்கள் மொய்க்கின்ற
தென்னங்கள் பேச்சுமில்லை
தைப்பூச வேல்களைப்போல்
தகதகக்கும் விழிகளில்லை
மைப்பூசி மயக்குகிற
மாய்மால இமைகளில்லை

பால்கோவா கன்னத்தில்
பதுங்குக் குழிகளில்லை
சங்குக் கழுத்தோரம்
சரஞ்சரமாய்   தங்கமில்லை
பட்டுப்புடவையில்லை
பளபளக்கும் இரவிக்கையில்லை
இணையாக விளையாடும்
இருமுயலாய் நெஞ்சமில்லை

ஈர்ப்புவிசை நளினமில்லை
ஈச்சம்பழ இனிமையில்லை
தெளிந்தநதி சாயலில்லை
தேவதையின் அம்சமில்லை

கட்டக் கறியதேகம்
காப்புக்காய்த்த கைப்பாதம்
அருகில் கடந்துசென்றால்
அன்றலரும் வியர்வைவாசம்
பவழமணி சங்கிலிகள்
பழசான சிமிக்கிக்கம்மல்
தூசுபடிந்த முகமெல்லாம்
துளசிமலர் தூயசாயல்

கள்ளம் கபடமில்லை
கருணைக்குப் பஞ்சமில்லை
தெருவில் நடந்தாலே
தெய்வத்தை மிஞ்சுங்கலை
செம்பட்டை முடியழகு
செருப்பில்லாக் காலழகு
மம்முட்டித் தோளழகு
மாதுளங்காய் மார்பழகு

வெட்டியப் பனங்காயாய்
விழுங்குகிற விழியழகு
முட்டிடும் இளங்கன்றாய்
முந்துகிற சினமழகு
நாற்றுநடும் விரலழகு
நாரையேங்கும் நடையழகு
மாடுமேய்க்கும் விதமழகு
மஞ்சள்பூசும் முகமழகு

தேய்ந்த கொலுசொலிகள்
தெறித்துவிழும் வளையொலிகள்
நுரைவெடிக்கும் சிரிப்பொலிகள்
நூல்புடவை கிழிசலொலிகள்
பட்டப் படிப்பில்லை

பணங்காசில் ஆசையில்லை
பாடுபட்டு வீடுவந்தால்
படுத்துறங்கும் சொர்க்கநிலை

சேறு படிந்ததேகம்
சேரிவாழும் பொன்வசந்தம்
கூழைக் குடித்துவாழும்
குழந்தையான குமரித்தனம்
வாயாடி என்றாலும்
வஞ்சனை எண்ணமில்லை
ஊரோடு வாழ்ந்தாலும்
உலகறிந்த ஞானநிலை

பணிவும் துணிவுமுள்ள
பக்குவத்தில் கெட்டிக்காரி
வீடுவாசல் வயல்காக்கும்
வீரக்குடி பிறப்புக்காரி
நாட்டுப் புறத்துக்காரி
நாள்தோறும் உழைப்புக்காரி
ஆற்றல் பெருகிநிற்கும்
ஆதிசக்தி தோற்றக்காரி

இன்புற்று இறைப்படைத்த
இனியவளாம் ராசாத்தி
கண்டிட்டால் கண்மோட்சம்
கட்டிவாழ் மண்சொர்க்கம்

—

பொன்.தெய்வா,
ஐவேலி, விழுப்புரம் மாவட்டம்.



# கழிமுகம்

உன் கூந்தல் எனும்
அலையாத்திக்காடுகளில்
நான் விரல் வைத்து நடக்கிறேன்

அலையாத்திக்காடுகளை
நான் வேதாரண்யம் என்கிறேன்
நீ திருமறைக்காடு என்கிறாய்

இந்தச் சிட்டிகை அளவு
ஊடல் எனும் உப்பை
வைத்துக்கொண்டு
உப்புச்சத்தியாகிரகம் செய்யாதே

கழிமுகம் கடலாகும் போது
உப்பைக் கண்டுபிடிப்பதும்
கடல் கொண்டலாகும் போது
உப்பைத் தொலைத்துவிடுவதும்
கண்களை மூடி
நனவுகளைத் தொலைத்துவிட்டு
பின் கனவுகளால்
அவற்றைக் கண்டடையும்
கண்ணாம்மூச்சி விளையாட்டு தான்
கண்மணி.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்.

# நல்விதை

*பின் எப்போதைக்குமான
முன் யோசனைகள் அது
அவையாகிவிடத்தான்
அப்படி ஒரு முடிவு
எதற்கென்று எவர் கேட்பினும்
இருப்பதின் யதார்த்தத்தின்
நல்விதை சரிதான்
நம்பினோரின் நயம்பட்ட
சொல் பூண்டு புல் நீரென
மலை செய்யலாம் மானுடம்
நிரம்பி தழைத்து உருண்டு
மிதக்கும் தூரத்தில் பச்சை
மிச்சமென யானை கூட்டம்
அச்சமில்லை இரவு கண்கள்
நவயுகம் நடுராத்திரி செய்யும்
இளம் கருப்பில் நெஞ்சார்ந்த
நன்றிகளோடு நட்சத்திரங்கள்
மேகம் மலராகி மங்கையாகி
நீலம் மறைக்க நிஜங்கள் உரைக்க
ஆவென தலை விரித்த மரங்களில்
உற்றுப் பாருங்கள்
நீங்கள் சிறகோடும்
பறவைகள் மனதோடும்
அதிகாலை இனி
மரம் வைத்தவனுக்கு மட்டும் தான்...!*

## தூரம் துயரம் துக்கமென நகர்கிறது

*வழக்கம் போல
இன்றெழுதியதையும்
அனுப்பி விட்டேன்
நேற்று முந்தாநாளும் கூட
அனுப்பியிருக்கிறேன் தான்
சட்டென வந்த நினைவில்தான்
நிற்க என
எனையே கூர்ந்தேன்
இதயம் நின்ற வாட்சப் வழியே
எப்படி அது சாத்தியம்
எனக்கு பெரும் மறதி
அதே எனக்கு சிறு நினைவும் தான்
பிரியங்களின் நிகழ்வை
தள்ளி வைக்க இயலாத
புலனத்தில்
தொடர்ந்து நெருங்குகிறேன்
தூரம் துயரம் துக்கமென நகர்கிறது
நம்பிக்கையற்ற பொழுதில்
கிடைத்த தெளிவில்
மீண்டும் மீண்டும் சிந்திக்கிறேன்
வாசல் வரை வந்து வரவேற்கும்
புன்னகை முகம் இனி இல்லை
எனும்போது
இயலாத தவிப்பை
எழுதி எழுதி அடிக்கிறேன்
கண்கள் மூடிக் கிடக்கும்
உன் வாட்சப் கண்கள்
நல்ல கவிதை
எழுதும் போதெல்லாம்
திறந்து கொள்வதை
எப்படித்தான் உன்னிடம் சொல்வது
அக்கா...!*

## அதன் பாரம் சுமந்தவர்

*போனதில் இருந்து கூடவே தான்
இருந்தார்
நாயன தாத்தா வீடு விற்றதில் இருந்து
ஜெயக்குமார் அண்ணன் இறந்தது வரை
பேசிக்கொண்டே இருந்தார்
நளினாவிடம் மறு அறிமுகம் செய்த
போது*

ஏனோ அவர் முகத்தில் வெட்கம்
கோண புளிய மரம் சாய்ந்து விட்டதை
சொல்லி
வருத்தப்பட்டு அதன் பாரம் சுமந்தவர்
மயிலா தன்னை விட்டு சென்றதெல்லாம்
கனவு போல என்றார்
இருந்த இரண்டு கிணறுகளையும்
மூடி விட்டதாக சொன்னவர்
நொடி மௌனங்களில் நீச்சல்
மறந்திருக்கக் கூடும்
ஊரே மாறி விட்டது என்றவர்
இடையிடையே தாடி தடவிக்
கொண்டே
தூரத்து நினைவுகளில் அல்லாடினார்
போன காரியம் ஸ்நேகிதன் மகளின்
திருமணம்
எல்லாரிடமும் எனைக்காட்டி காட்டி
யாருன்னு தெரியுதா என கேட்டு கேட்டு
புளகாங்கிதம் அடைந்தார்
எல்லாம் முடிந்து பேருந்தில் ஏற்றி விட்டு
பார்த்தவரின் கண்கள் அலைமோதின
கை கொடுத்து உள்ளங்கை அழுந்த
மௌனத்தில் முகம் கோண கோண
பேருந்து கிளம்பி விட்டது
நெடுந்தூரம் வந்த பிறகும் மனதில்
அப்பிய இருள்
நீங்கியிருக்கவில்லை எனக்கு
நொடிகளில் எதிரே கடந்து சென்ற
பேருந்து முகப்பு வெளிச்சத்தில் கண்கள்
கூச
சிந்தையில் ஓர் அசைவு மனதில் ஒரு
நிறைவு
நல்லவேளை
மல்லிகா பற்றி அவர் பேசவுமில்லை
நான் கேட்கவில்லை

## சிலேட்டு சித்தாந்தங்கள்

எப்போதும் துள்ளி ஓடும்
வீட்டு நாய்க்கு
முயல் என
பெயரிட்டிருக்கிறான்
கூண்டில்லாத கிளி கண்களில்
பச்சை குண்டுகள் என்கிறான்
எலிக்கு பயந்து விலகிய
கோழிகளின் கொண்டையில்
புறா இறகு பூத்திருப்பது
அவன் நம்பிக்கை
யானை நடைக்கு பழகிய
பூனை படைகள்
அவன் கட்டுப்பாட்டில் தான்
டிசைன் போட்ட கொம்போடு
மாடு கத்தும் குரலுக்கு
ஆட்டு வால் அசைவு
காதாட்டுவது வாலாட்டுவது
போலிருந்தால்
வாங்க இருக்கும் முயலுக்கு
நாயென்றும்
பெயர் வைப்பானாம்
குரங்கு சிரிப்பு கோபத்துக்கு
குதிரை சிரிப்பு கொஞ்சலுக்கு
கேட்டுக் கொண்டிருப்பது
நாம் எனில்
சொல்லிக் கொண்டிருப்பது
அவைகள் என்கிறான்
மழலை மொழி படபடக்க
வாத்து நடையில்
நீந்தி பார்க்கிறது
சிலேட்டு சித்தாந்தங்கள்.....!

--
கவிஜி.

# குறுங்கவிதைகள்

1) உண்மை அன்பைத் தேடித்தேடி
கிடைத்தது கனவில்
விளங்காத கானல் நீர்.

2) கருவிகளின் வளர்ச்சியில்
கரைந்தது கொண்டிருக்கிறது
அன்றாட ஆரோக்கியம்.

3) கடைகளின் பளபளப்பு
காட்சிகளின் வனப்பு மனதில்
பணப் போர்.

4) மூடிய கண்களில்
முழு நிலவின் வெளிச்சம்
எப்போதும் அவளிடம்.

5) விதவிதமான மனிதர்கள்
வித்தியாசமான சூழல்கள்
கொறிப்பு எண்ணங்கள் குழந்தைகளிடம்.

6) விட்டுவிட்டு பெய்தமழை
சொட்டு சொட்டாக கரைந்தது
வரம்கண்ட பூமியில்.

7) குழந்தைகளின் குழந்தமை
தொலைந்து போகிறது
மதிப்பெண் ஆட்சியில்.

8) குச்சி ஐஸ்கள் கரைவதில்லை
சாலையோர மரங்கள், கிராமங்கள்
சாதித்த உபயம்.

9) நேரமும் காலமும் மறந்து போக
உறவும் நட்பும் நீட்சியில்
வாழ்க்கை வேட்டையில்.

10) திரைப்பட பிம்பங்களில்
சிதைகிறது இளைஞர்களின்
இயற்கையமைப்பு.

—

கவிஞர் விண்மீன்,
சென்னை.
+91 9941390563

# சிந்தனை1000

தினம் கடந்து செல்லும்
சாலையோரத்தில்
ஒரு காளான் குடையும்,
முந்தானை பிடித்துக்கொண்டு ஒரு
பெண்ணும் மழையில் ஈரமாயினர்....

சாலையில் பள்ளத்தை பார்த்தபடி
நாயின் வழிப்பயணம்
கல்லெறிந்தவுடன் களைகிறது
பள்ளத்தை ஆக்கரமித்த
அரசு விளம்பரம்...

ஒரு வாகனத்திற்கு ஒரு வாகனம்
மூன்று மீட்டர் இடைவெளி
இல்லாத காரணத்தினால்
மூக்குடைந்து ஏற்றப்பட்டது
முகமுடைந்த வாகனமொன்று..

வானத்தின் துளிகளில்
உலகையே ஓர் வடிவத்தில் கொண்டு
சேர்த்தது மழை,
நான் குடை கொண்டு சொட்டுகளாக
வடிவமைத்தேன்.....

நான் கவிஞனென்கிறேன்
சிரித்து கொண்டே அவர்
வாசகனென்கிறார்
நிரம்புகிறது முகநூலின் புன்னகை
பக்கங்கள்....

நேரம் காலம் பார்த்து விரைவாக
செல்லும் நபருக்கு முன்னால்
சிவப்பு நிறத்தில் விளக்குகள் சாலையில்
பச்சையிட்டு வழியனுப்புகிறது
ஒரு நிமிடம்...

அலமாரியை அலங்கரித்த
புத்தகங்களில் அடிக்கோடிட்ட
பகுதிகளெல்லாம் மீண்டும் புத்தகமாயின
என்னுள்...

வழக்கமாக நான் தேநீர்
அருந்தும் டீக்கடையில்
புதிதாக வாலாட்டிக் கொண்டு நான்கு
கால் சீவன்
எனது காலாட்டலுக்கு இணையாக
வாலாட்டுகிறது
முந்தைய நபர் ஊற்றி சென்ற தேநீர்
சுவையை நாவழித்துக் கொண்டே...

மரங்களை அழித்ததை அவ்வப்போது
நினைவுப்படுத்துகிறது,
என் வீட்டின் சுவரில் பொறுத்தப்பட்ட
காடுகளை அழிக்காதீரென நான் பெற்ற
சான்றிதழின் மரக்கவச வேலைபாடு.....

சமுக விலங்குகளுக்கு சரணாலயம்
அமைக்க விரும்புகிறேன்,
கையில் சங்கிலியுடன் இணைக்கப்பட்ட
நாயின் இழுவையில் நான்....

## பழமொன்றியு

1) அடம்பன் கொடியும் திரண்டால்
மிடுக்கு.
யார் தேடியும் கிடைக்காத ஒற்றுமை
எங்கேனும் இருந்தால் கேட்க
வேண்டியது வேதனை..

2) அடிமேல் அடியடித்தால் அம்மியும்
நகரும்...
யாராக இருந்தாலும் அளவோடு வழி..
சூரக்காற்றிற்கு புதிய பாதை போடு..

3) அடியாத மாடு படியாது.
யார் அப்படி சொன்னது
நன்றாக அடிக்காத்து நாலு தெரு
சுற்றுகிறது...

4) அடி உதவுவது போல் அண்ணன்
தம்பி உதவமாட்டார்கள்
எத்தனை அடி அடித்தாலும்
அண்ணனுக்கு தம்பி இல்லை..
தம்பிக்கு அண்ணன் இல்லை...

5) அடக்கமே பெண்ணுக்கு அழகு.
அழகான பெண்ணுக்கு இல்லாத ஒன்று..
ஆயிரம் பொன் கொடுத்தாலும் கிட்டாத
ஒன்று...

*6) அரசன் அன்று கொல்வான் தெய்வம்
நின்று கொல்லும்...
யார் கொன்றாலும்
கொல்லாவிட்டாலும் பசி மக்களை
தானாக கொல்லும்...*

*7) அகத்தினழகு முகத்தில் தெரியும்
அழகில்லாதவன் மனம் யாருக்கு
தெரியும்...*

*8) அகல இருந்தால் நிகள உறவு,
கிட்டவந்தால் முட்டப் பகை.
தூரமிருப்பவனிடம் பேசிப்பழகு..
அருகில் இருந்தால் சற்று தூரம் விலகு...*

*9) அகல உழுகிறதை விட ஆழ உழு.
ஆயிரம் பேர் இருக்கும் இடத்தில்.
நல்லவனை தேடப்பழகு...
அறியாத இடத்தில் அமைதியாக இரு...*

*10) அசைந்து தின்கிறது யானை,
அசையாமல் தின்கிறது வீடு.
அசைந்து உண்கிறது உறவு..
அசையாமல் மறைகிறது பலகால சம்பள
வரவு...*

## ஒரு பட்டாம்பூச்சியும் சில குறுங்கவிதைகளும்...

*1)
ஓடம் நகர்ந்த பின்பு
அலையோடு விளையாடுகிறான்
மாலை நேரக் கதிரவன்*

*2)
புகுத்திய மூச்சுக்காற்றில்
புதுமையான காற்றாய்
முகாரி ராகம்*

*3)
புல்லாங்குழலில் வழியும் இசை
வயிறற்று புன்னகைக்கிறது
ஐந்தறிவின் பசி*

*4)
தனிமை
எதிரும் புதிருமான உருவத்தில்
வானில் தெரிகிறது மேகங்கள்*

*5)
ஒரு சோடி மீன்கள்
துள்ளலில் அலை அணிகிறது
வளையணி விழா*

—

*கவிஞர். சே கார்கவி,*
*நாகப்பட்டினம்.
(Er. Prof. சே கார்த்திகேயன். ME)
SWD. Chennai*



# உதிர்ந்த இலைகள்...

வேர்களின் வலிமையில் விருட்சமாகி
நின்று
கிளையெனும் தோகையில் பச்சை
வண்ண மயிலாக
காற்றில் ஆடிய கார்மேக காட்சிகள்
காணாமல் போனது!

துரு பிடித்த இரும்பு கூட
சிறு செடி தன்னில் வாழ இடம்
கொடுக்கிறது•••

ஆனால் மரமிது மண்ணில் வாழ இடம்
கொடுக்க மறுக்கிறது மனித இதயம்!
மரத்தினை நேசித்த வரை அனைவரும்
நலமே!

அது பகையாளியாக மாற பல நோய்கள்
விருந்தாளியானது
நம் உடல் எனும் வீட்டில்!

நெடு உயரம் வளர்ந்த பின்னும்
நிதானமாய் இருக்க தவறியதில்லை;

நித்தம் நிழல் தரும் அன்பெனும் குடை
கொண்டு!

தலைக்கணம் இருந்ததில்லை!
இலை கணமாய் எண்ணியதில்லை!

மனிதன் மறக்கத் தொடங்கியதும்
காற்றை காதல் செய்து
உதிர்ந்த இலைகள் உடலை நீங்கிட,

ஒற்றை மரமிது ஓங்கி நிற்கிறது
கிளைகளை மட்டும் தாங்கி!

—

பொன்மணி தர்மராஜன் B.E.,
பரவாக்கோட்டை.

## பால்யம்

அவசரமான பயணத்தில்
பணம் வாங்காமல்
பயணச்சீட்டு மட்டும்
கொடுக்கும்
நடத்துனரின்
பெயரை வாசித்ததும்
தெரிகிறது
நம்மோடுப் பள்ளியில்
படித்த பால்ய
நண்பன் தான் என்று...

—

இரா. மதிராஜ்.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.